# இனவரைவியல் நோக்கில் அஜ்னபி நாவல்

கி .ஷீபா & க .கோ .அனிதாகுமாரி
தெ.தி. இந்துக்கல்லூரி ,
தமிழ் ஆய்வு மையம், நாகர்கோவில்.

58

**ஆய்வுச்சுருக்கம்:**

'அஜ்னபி' என்ற நாவலில் வெளிப்படும் இனவரைவியல் கூறுகளை நுணுகி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது. நாவவில் கூறப்பட்டுள்ள வெளிநாட்டுவாழ் இஸ்லாமிய இனமக்கள் பற்றிய இனவரைவியல் கூறுகளை வகைப்படுத்தித் தரவுகளின் அடிப்படையில் தொகுத்தும் பகுத்தும் ஆய்வு மேற்கொள்ளப்படுவதால் பகுப்பாய்வு அணுகுமுறை , விளக்கமுறை அணுகுமுறை , சமூகவியல் அணுகுமுறை , இனவரைவியல் அணுகுமுறை ஆகிய அணுகுமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன. வெளிநாட்டில் வாழ்கின்ற மக்கள் குறித்து அஜ்னபி என்ற நாவல் பற்றிய ஆய்வுகளில் இனவரைவியல் நோக்கில் இதுவே முதல் ஆய்வுக்கட்டுரையாக அமைகிறது. மக்களினத்தின் வரலாறுகளை அறிந்து கொள்ள முக்கிய ஆவணமாக அமைவன இலக்கியங்கள் எனலாம். பண்டைய இலக்கியங்கள் யாவும் செய்யுள் வடிவில் அமைந்திருந்தன. மேலைநாட்டினர் வருகைக்குப்பின் குறிப்பாக 18-ஆம் நூற்றாண்டுக்குப்பின் தமிழ் இலக்கியங்களில் மரபு வழியாக இருந்து யாப்பு முறைகள் மாற்றம் பெற்றுச் சிறுகதை ,நாவல் ,நாடகம் போன்ற இலக்கியங்கள் தோற்றம் பெற்றன . இதில் சிறுகதையும் , நாவலும் மக்களின் வாழ்வினை மையப்படுத்தி இயற்றப்படுவன. நகைச்சுவை , கோபம் , அழுகை என்ற அனைத்தையும் உள்ளடக்கி மிகுந்த சுவையுடன் அமைவன. சிலநேரங்களில் கற்பனையாகவும் புனையப்படுவன. அவ்வகையில் குறிப்பிட்ட இனத்தின் வாழ்வியலைப் பிரதிபலிக்கும் நாவலாக அமைந்த அஜ்னபி என்ற நாவலின் இனவரைவியல் கூறுகளை ஆய்வு மேற்கொள்வதன் மூலம் வெளிநாட்டில் வாழும் அயல் நாட்டு மக்களின் பண்பாட்டுக் கூறுகள் , எதிர்கொள்ளும் சிக்கல்கள் ,வெளிநாட்டு வாழ்க்கை என வெளிநாட்டிற்கு வேலைத் தேடி செல்லும் மக்களின் வாழ்வியலானது அனைத்து நிலைகளிலும் எவ்வாறு உள்ளது என்பதைக் கண்டறிந்து ஆய்வு முடிவாக சமுதாயத்திற்கு எடுத்துக்காட்ட இயலும்.

கலைச்சொற்கள் : அடிப்படைவாதிகள், முத்தவாக்கள், நீர்கோளம், பிரதானம், இனக்குழு.

**முன்னுரை :**

இனவரைவியல் நோக்கில் அஜ்னபி நாவல் என்பது ஆய்வு தலைப்பாகும். தமிழ் நாவல்களானது மக்களின் இனக்குழு வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் நின்று அதன் சூழல் சார்ந்த கண்ணோட்டத்துடனும் மானுடவியல் சார்ந்த கண்ணோட்டத்துடனும் மக்களின் இனக்குழு வாழ்க்கையை வெளிப்படுத்துகிறது. குறிப்பிட்ட மக்கள் குழுவினரின் இனவரைவியல் கூறுகளை வாழ்வியல் அனுபவங்களுடன் இணைந்து ஒரு நாவலை உருவாக்குகிற பொழுது அது இனவரைவியல் சார்ந்த நாவலாகிறது. அவ்வகையில் ஆசிரியர் மீரான் மைதீனின் புனைவில் வெளிப்பட்ட அஜ்னபி என்ற நாவல் வெளிநாட்டில் வாழும் மக்களின் வாழ்வைப் பற்றி பேசுவதாக அமைந்துள்ளது. வெளிநாட்டு வாழ்வு என்ற அழகின் பின்னால் மறைந்திருக்கும் பல மனிதர்களின் கதையை அஜ்னபி கூறுகிறது. இந்நிலையில் இந்நாவலில் உள்ள இனவரைவியல் கூறுகளை நுணுகி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது .

இனவரைவியல் -விளக்கம் :

19-ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் மேலைநாட்டுக் கல்விப் புலங்களில் அறியப்பட்ட மானுடவியல் துறையின் ஒரு உட்பிரிவே இனவரைவியல் அல்லது இனக்குழுவியல் எனப்படுவது ஆகும். இனக்குழு என்னும் பொருளை உடைய Ethnography என்னும் ஆங்கிலச்சொல் Ethnos Graphein ஆகிய

கிரேக்கச்சொற்களின் மூலங்களைப் பெற்றது. Ethnos என்பதற்கு இனம் இனக்குழு மக்கள் என்பது பொருள். Graphein என்பதற்கு எழுதுவது அல்லது வரைதல் என்பது பொருள். ஆகவே இனவரைவியல் என்பது ஒரு தனிப்பட்ட இனக்குழு அல்லது மக்களைப் பற்றி எழுதுதல் என்னும் பொருளை உணர்த்துகிறது. ஒரு இனக்குழுவைப் பற்றிய முழுமையான படிப்பு என்னும் வகையில் இப்பிரிவை இனக்குழுவியல் என்று கூறலாம்.

இனவரைவியலாளன் முதன்மைப்படுத்தும் பண்பாட்டுக் கூறுகளாக பக்தவத்சல பாரதி சிலவற்றை கூறியுள்ளார். ”பண்பாடு என்ற முழுமையைப் பல்வேறு சிறுசிறு கூறுகளாக அடையாளம் கண்டு வருணிப்பதன் மூலம் விளக்க முயல்கின்றனர், அவ்வகையில் புவிச்சூழலியல் , சுற்றுச்சுழல், காலநிலை, குடியிருப்புமுறை, உறைவிடமுறை ,வாழ்வியல்சடங்குகள், குழந்தை வளர்ப்பு முறை , பண்பாட்டுவயமாக்கமுறை, மக்களின் உளவியல்பாங்குகள் , மணக்கொடை, மணவிலக்கு, வாழ்க்கைப் பொருளாதாரம், தொழிற்பகுப்பு முறை , உற்பத்திமுறை, நுகர்வு முறை , பங்கிட்டு முறை , பரிமாற்ற முறை , கைவினைத் தொழில்கள் , அரசியல் முறைகள் ,, அதிகார உறவுகள் சமூக கட்டுப்பாடுகள் , மரபுசார் சட்டங்கள், சமய நம்பிக்கைகள் , சடங்குகள், வழிபாட்டு முறை , மந்திரம், சூனியம், விழாக்கள், இசை, விளையாட்டுக்கள்,, அரசியல்சிந்தனைகள், நாட்டார்வழக்காறுகள் ஆகிய கூறுகளை இனவரைவியலாளன் செய்திகள் திரட்டுவதற்காக முதன்மைப்படுத்துகிறான் ” (பக்தவத்சல பாரதி 2009) என்று பக்தவத்சல பாரதி எடுத்துக் கூறுகிறார் .

**இனவரைவியலும் நாவலும் :**

சமகாலத்தில் பலவிதமான கலைக் கோட்பாடுகளும் அறிவியல் சிந்தனைகளும் இலக்கியத்தோடு ஒப்பிட்டு ஆய்வு செய்யப்படுவது போலவே இனவரைவியல் இலக்கியத்தோடு ஒப்பிட்டு ஆய்வு செய்யப்படுகிறது. இத்தகைய இருதுறை ஒப்பிட்டு ஆய்வுகள் வாசகருக்கு ஒரே நேரத்தில் இரண்டு புலன்கள் குறித்த புரிதலை ஏற்படுத்த வல்லவை. மேலும் இலக்கியம் , இனவரைவியல் இரண்டுமே மானுட வாழ்வியல் பண்பாட்டுக் கூறுகளைப் பேசுபொருளாகக் கொண்டுதான் இயங்குகிறது.

ஆ .சிவசுப்பிரமணியன் இனவரைவியல் செய்திகளை நாவலாசிரியன் அறிந்து கொள்ளும் விதத்தை மூன்று வழிமுறைகளில் கூறியுள்ளார்.

1. சுய அனுபவம்.
2. கள ஆய்வு முறை
3. நூலறிவு

என்ற மூன்று வழிமுறைகளில் அறிந்துகொள்ள முடியும். இவற்றுள் முதலிரண்டு வழிமுறைகளில் கிடைக்கும் தரவுகளை முதல்நிலைத் தரவு என்றும் மூன்றாவது வழிமுறைகளில் கிடைக்கும் தரவுகளை இரண்டாம் நிலைத் தரவு என்று குறிப்பிடுகிறார். இனவரைவியல் என்பது ஒரு இனக்குழு குறித்த முழுமையான தகவல்களை உள்ளடக்கியது. ஒரு படைப்பாளனின் படைப்பில் ஒரு குறிப்பிட்ட பண்பாட்டை பற்றிய முழு இனவரைவியல் தகவல்களும் இடம்பெறும் என்று கூறமுடியாது. ஆனால் படைப்பாளரின் புனைவுகளில் குறிப்பிடும் மக்கள் வாழ்வியலில் இனவரைவியல் கூறுகளை நாம் பிரித்து பார்க்குமாறு அமைந்திருக்கும் .

**அஜ்னபியில் இனவரைவியல் கூறுகள் :**

இந்த ஆய்வுக்கட்டுரையில் இனவரைவியல் ஆய்வுக்கு உட்படுத்தப்படும் அஜ்னபி என்ற நாவலை எழுதிய ஆசிரியர் மீரான் மைதீன் அஜ்னபி நாவல் உள்பட ஓதி எறியப்படாத முட்டைகள் , ஒச்சை என்கிற நாவல்களும் மஜ்னுன் என்ற குறுநாவலும் கவர்னர்பெத்தா , ரோசம்மா பீவி , சித்திரம் காட்டி நகர்கிறது

கடிகாரம், பலாமரம் நிற்கும் வீட்டிற்குக் கிளம்பிக் கொண்டிருக்கிறான் என்ற சிறுகதை தொகுப்புகளையும் எழுதிய எழுத்தாளர் ஆவார். இதில் அஜ்னபி என்ற நாவல் வெளிநாட்டு வாழ் இஸ்லாமியர்களின் வாழ்வைப் பற்றிய பேசுவதாக அமைந்துள்ளது. வேறு நாட்டிற்குச் சென்று உறவுகளைப் பிரிந்து வேலை செய்யும் அனைவருக்கும் மிக நெருக்கமான நாவலாக இருக்கும். சவுதி அரேபியாவில் நடக்கும் கதை. உரிய விசா இல்லாமல் அரபு நாட்டிற்குச் சென்று அங்கே பல இடங்களில் வேலை செய்து பல துன்பங்களுக்கு ஆளாகி எப்படியாவது இந்தியாவுக்கு திரும்பி சென்று விட வேண்டும் என்று துடிக்கும் ஃபைசலின் கதை என்று அஜ்னபியைக் கூறலாம்.

**முத்தவாக்களின் கட்டுப்பாடுகள் :**

எல்லாச் சமயங்களிலும் சில அடிப்படைவாதிகள் இருப்பது போன்று அரேபியாவிலும் இஸ்லாமிய சமய அடிப்படைவாதிகள் உள்ளனர் . இவர்கள் பெரும்பாலும் அனைத்து நேரங்களிலும் பொது இடங்களில் பெண்களுக்கும் ஆண்களுக்கும் மதச் சட்டங்கள் என்ற பெயரில் பாதுகாவல் சட்டத்தை மனதில் கொண்டு பல இன்னல்களையும் தண்டனைகளையும் வழங்க காரணம் ஆனவர்கள். இஸ்லாத்தின் பாதுகாவலர்களாக தம்மை அடையாளப் படுத்தி கொள்ளும் இவர்கள் தொழுகைக்கு போகாத அஜ்னபிகளைப் பிடித்து வந்து மொட்டையடிப்பது தாக்குவது போன்ற செயல்களில் ஈடுபடுவர். ஆனால் சொந்த மக்களின் ஏழை அரபிகளைத் தவிர ஏனைய அரபிகளிடம் அவர்கள் இதை மேற்கொள்ள முடியாது. அரேபியாவில் உள்ள அமெரிக்க முகாமிற்கு வருகின்ற பெட்டிகளை பரிசோதித்து அனுப்பும் ஆற்றல் முத்தவாக்களிற்கு இல்லை. ஏனென்றால் இஸ்லாத்திற்கு எதிரான மதுகுப்பிகள் , நீலப்படம் பன்றி இறைச்சி அரேபியாவில் இறக்குமதி செய்யப்பட்டு தான் வருகிறது. ஆனால் விமானம் மூலம் வரும் தமிழ் இதழ்களில் இடம்பெற்றுள்ள நடிகைகளில் கவர்ச்சிப்படங்கள் மீது மைப்பூசி மறைக்கும் பணி முத்தவாக்கள் செய்கிறார்கள். இதனை , ”கருப்பு மை பூசுவதையும் விமான நிலையத்தில் இதற்கான முத்தவாக்கள் இருப்பதையும் அவர்கள் தான் இந்த மைப்பூச்சு வேலையை செய்து நாட்டின் கண்ணியத்தைக் காப்பாற்றுகிறார்கள் ” (மீரான்மைதீன்,2013) என்ற வரிகள் புலப்படுத்துகின்றன.

“வீடுகளில் புகைப்படம் மாட்டுவதைக் கூடப்பாவம் என்ற கருத்தை பரப்பியுள்ள நாட்டில் அரசு அலுவலகங்களிலும் ரூபாய் நோட்டில் மன்னரது படம் காணப்படும் வினோதம்”(ஆ.,சிவசுப்பிரமணியன்,2014) என்று, சிவசுப்பிரமணியன் கூறியுள்ளார். இதுபோன்ற மத அடிப்படை வாதம் குறித்த செய்திகள் இந்நாவலில் இடம் பெற்றுள்ளன .

**சுற்றுச்சூழலும் காலநிலையும்:**

சுற்றுசூழல் என்பது ஒரு நாவலில் இடம்பெற்றுள்ள மாந்தர்கள் வாழும் இடங்களின் சூழல்களை குறிப்பிடுவது ஆகும் . அவர்களைச் சுற்றியுள்ள இடங்களான சிறப்புமிக்க சுற்றுலாத்தளங்கள் , மலைகள் , ஆறுகள் , காடுகள் , கடல்கள் போன்றவற்றை குறித்து கூறுவது . “ஓரிடத்தின் சுற்றுச்சூழலைத் தீர்மானிப்பதில் அவ்விடத்தின் பருவநிலைக்கு மிக முக்கியப் பங்குண்டு . பருவநிலையே சுற்றுச்சூழலின் அனைத்து நன்மைகளையும் கட்டமைக்கிறது ”(ராஜகோபாலன். எம் .ஆர் ,2007) என்று சுற்றுச் சுழலும் காலநிலையும் குறித்து ராஜகோபாலன் கூறியுள்ளார் .

அரபு நாட்டினர் பலவகையான சுற்றுச்சுழல் சவால்களை எதிர்கொள்கின்றனர் . வெப்பநிலை அதிகரிப்பு , நீர் பற்றாக்குறை , நீர் மாசுபாடு , புழுதிப்புயல் என்று அடுத்தடுத்த பல காலநிலைகளுக்கு மக்கள் ஆளாகின்றனர். இதனை அஜ்னபி நாவலில் “மணல்காற்று வீசும் போது மனிதர்கள் வசிப்பிடங்களில் அடைபட்டுக் கொள்வார்கள். இந்தமுறை மணல்காற்று கற்பனை செய்யமுடியாத அளவுக்கு ரொம்பவும் உக்கிரமாக இருந்தது ”( மீரான்மைதீன் 2013) என்ற வரிகள் எடுத்துரைக்கின்றன. மக்கள் இந்நாட்களில் வீட்டிற்குள்ளே முடங்கி விடுவார்கள் . முற்றிலும் அடைக்கப்பட்ட வீட்டிற்க்குள்ளேயும் மணல் குவியலாக வந்து குவிந்து விடும் நிலை காணப்படுகிறது.

தொடங்கும் இடமும் இல்லாமல் முடியும் இடமும் எது என்று தெரியாமல் இந்த உயிர்க்கோளத்தை சுற்றி வியாபித்திருக்கும் நீர்கோளம் தான் கடல் . பல நேரங்களில் அரபு நாட்டில் உள்ள அஜ்னபிகளுக்கு நிம்மதி தருவது கடலும் , "கடல் அலைகளும் தான் . கடலின் பரப்பின் பகல்பொழுதில் பரவிக் கிடந்த நிறங்களின் அதிசயம் இப்போதுதான் அவனால் பார்க்கப்படுகிறதென்பதால் அவன் பார்வையை நீண்ட நேரம் செங்கடலிலிருந்து மாற்றிக் கொள்ளவில்லை " (மீரான் மைதீன் ,2013) என்ற வரிகள் மூலம் கதையின் நாயகனாக தெரியும் ஃபைசல் தனது துன்பத்தை மறக்க கடலை பார்த்துக் கொண்டிருப்பது விளங்குகின்றன . இது போன்ற கடலின் உக்கிரமான நிறத்தை குறித்தும் , அனல் காற்றின் தன்மையையும், புழுதிப்புயலின் வருகையையும் அதன்பின் தோன்றும் வெப்பம் அல்லது கடுங்குளிர் குறித்தும் இந்நாவலில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

**உணவு :**

இவ்வுலகில் வாழும் எந்த மனிதனும் நிலைபெற்று உயிர்வாழ உணவு இன்றியமையாதது ஆகும் . ஒரு சாதாரண மனிதன் தினமும் ஓடுவதே ஒரு வயிற்று பசியைப் போக்கவே. அந்த வகையில் அஜ்னபிகள் நினைத்த நேரத்தில் தனக்கான உணவை சாப்பிடுவதற்கு கூட சற்று சிரமத்திற்கு தான் ஆளாகிறார்கள் . " ஒரு குறிப்பிட்ட மக்கள் சமூகத்தின் அசைவியக்கங்களை உணர அவர்தம் உணவுப் பழக்கவழக்கங்களை கூர்ந்து நோக்க வேண்டும் . உணவு பழக்க வழக்கங்கள் ஒரு சமூகம் வாழும் பருவச் சூழ்நிலை , வாழ்நிலத்தின் விளைபொருட்கள் , சமுகப்படிநிலைகள் , உற்பத்திமுறை , பொருளாதார நிலை ஆகியவற்றைப் பொறுத்து அமையும் " ( தொ . பரமசிவம் , 2014) என்று பரமசிவம் தனது நூலான அறியப்படாத தமிழகம் என்ற நூலில் உணவு பழக்க வழக்கங்கள் குறித்து கூறியுள்ளார் .

அரபு நாட்டவர்களின் பிடித்தமான உணவாக ரொட்டியும் , இறைச்சியும் காணப்படுகிறது . அங்கு செல்லும் வேற்று நாட்டவர்களும் அந்த உணவையே அதிகமாக உண்ணுகிறார்கள். இதனை "மம்மலி குளித்து விட்டு வந்தபிறகு எப்போதும் போல அறையின் நடுவில் பிளாஸ்டிக் பேப்பர் விரித்து லெபனான் ரொட்டியும் சவுக்கத் உண்டாக்கிய கடாய்கோஸ் கறியும் பகிர்ந்து ... " (மீரான் மைதீன் , 2013) என்ற வரிகள் புலப்படுத்துகின்றன . மேலும் அங்கு தமிழ்நாட்டு உணவகங்களும் காணப்பட்டன . இட்லி , தோசை , சாம்பார் , சட்னி , ரசவடை போன்ற உணவுகளுக்காக தமிழர்கள் பலரும் அந்த உணவகத்திற்கு வருவார்கள் . மந்திச்சோறு , சவர்மா போன்ற உணவுகளையும் மக்கள் உண்கின்றனர் என்ற செய்திகளும் நாவலில் இடம்பெற்றுள்ளன .

**பொழுதுபோக்குகள் :**

மனித வாழ்க்கையில் பொழுதுபோக்கு இன்றியமையாத இடம் வகிக்கிறது . பொழுதுபோக்கு என்பது ஒவ்வொரு மனிதர்க்கும் ஏற்றவாறு மாறுபடும். அஜ்னபி நாவலில் இடம்பெறும் கதைமாந்தர்களின் பொழுதுபோக்குகள் தங்களின் வலியை மறக்கவும் , தனிமையை மறக்கவும் நண்பர்களோடு சேர்ந்து இன்புறுவதை எடுத்துரைக்கிறது .

"வேண்டற்க வென்றிடினும் சூதினை வேன்றது உம்
தூண்டிற் பொன் மீன் விழுங்கி அற்று". ( குறள் - 931)

என்ற குறளின் வழி சூதாட்டத்தை அக்காலத்திலே தவிர்க்க வேண்டும் என்ற நிலை வலியுறுத்தப் பட்டத்தை அறியலாம் .ஆனால் வெளிநாட்டில் வாழும் மக்களுக்கு பிரதான விளையாட்டாக சீட்டாடுதல் இருக்கிறது என்பதை இந்நாவல் சுட்டுகிறது . " சுவாரசியமான பேச்சு கதையாடல்களைத் தாண்டி சீட்டு விளையாட்டு அறையின் பிரதான நிகழ்வு " (மீரான்மைதீன் 2013) என்ற வரிகள் சூதாட்டத்தை பின்பற்றும் அஜ்னபிகள் உள்ளனர் என்பதை கூறுகிறது . மேலும் கதைகளை உருவாக்கி நாடகம் போன்று நடித்துக் காட்டி மகிழ்வதும் அஜ்னபிகளின் பொழுதுபோக்காக இருந்தது . இவ்வாறு தங்கள் வாழ்க்கையை மகிழ்ச்சியாக கொண்டு சொல்கிறார்கள் என்று நாம் எண்ணினாலும் "நேரம் போணும்லாடே . எல்ல

வலியையும் மறக்கணும்னா லூசு மாதிரி தான் பேசணும் " (மீரான்மைதீன் 2013) என்ற கதை மாந்தரின் கூற்றின் வழி அவர்களின் வேதனைக்குள்ளான வாழ்நாளை நாம் உணர முடிகிறது .

**வேற்றின மக்கள் :**

வெளிநாட்டிற்கு செல்லும் ஒவ்வொரு மனிதனும் தனது குடும்பத்தின் வறுமையை போக்க தாய் , தந்தை , மனைவி , மக்களை விடுத்தது சந்தோசம் , அன்பு , அரவணைப்பு , ஆறுதல் அனைத்தையும் இழந்து தனிமைப்படுத்தப்பட்ட வாழ்வை எதிர்நோக்கியே செல்கின்றான். இவ்வாறு செல்லும் மக்கள் இந்தியர்கள் மட்டுமல்லாமல் பாகிஸ்தானி , ஆப்கானிஸ்தானி , பங்களாதேஷ் , ஸ்ரீலங்கன் , தக்ரோணிகள், சோமாலி , யமனி , மிஷிரி , சூடானி என பல நாட்டவர்கள் இந்நிலையை எதிர்கொள்கின்றனர் .சூப்புக்கடை முதலாளியான பாகிஸ்தானி , நகைச்சுவையாக பேசி காலம்தள்ளும் காசர்கோடு மலையாளி சவுக்கத் , அஜ்னபிகளை அடிமைகள் என்று எண்ணும் அரேபிய முதலாளியான துவைஜி , ஃபைசல் மீது கருணை காட்டும் இந்தோனோசியக்காரி அருஷா , பிறர்மீது அன்பு காட்டும் எகிப்து நாட்டவரான இஷாக் , ஃபைசலுக்கு துவைஜியைக் குறித்து எச்சரிக்கும் ஸ்ரீலங்கன் குமார் என்று பல நாட்டு மக்களையும் அவர்கள் இடம்பெறும் நிகழ்வுகளையும் இந்நாவலில் சந்திக்க முடிகிறது .

**முடிவுரை :**

இனவரைவியலின் அடிப்படையில் இங்கு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட நாவல் , அஜ்னபிகளாக அரேபிய நாட்டில் தன வாழ்வினைத் தொடரும் மக்களின் வாழ்வியல் கூறுகளை பல காட்சிப்படுத்தி உள்ளது. நாவலின் ஆசிரியர் . 'ஃபைசல்' என்ற மையக் கதாபாத்திரத்தை கொண்டு கதையோட்டத்தைக் கொண்டு செல்கிறார் . சவூதி அரேபியாவில் வாழும் அயல் நாட்டவரை கருவாக கொண்டு நகரும் நாவலாதலின் "அஜ்னபி" என்பது பொருத்தமான தலைப்பே . முத்தவாக்கள் என்கிற மதக்குருக்களின் கடுமையான நடைமுறைகளை அஜ்னபிகள் எதிர் கொள்கின்றனர் . மேலும் அவர்களின் உணவு முறைகள் குறித்த செய்தியும் , அவர்களது துன்பம் நிறைந்த வாழ்வினை தற்காலிகமாக மறக்க முயலும் பொழுதுபோக்கு முயற்சிகள் போன்றவற்றை ஆசிரியர் சிறந்த கதை உரையாடல்களின் வழி எடுத்துரைத்துள்ளார் . இந்நாவலில் இடம்பெற்றுள ஒவ்வொரு கதைமாந்தரின் வாழ்வியலும் வெவ்வேறானவை. இனம் , மொழி , குணம் என்பனவற்றால் தனித்தனி அடையாளங்களை கொண்டவர்கள் . இவர்களில் புகழுக்குரியோரும் உண்டு .பழிக்கு ஆளாகுகிறவர்களும் உண்டு என்பதை இக்கட்டுரையில் அறிய முடிந்தது . இவர்களை சிறப்புடன் வேறுபடுத்தி காட்டியுள்ளார் ஆசிரியர் .இவ்வாறு வெளிநாட்டு வாழ்வு என்கிற அழகின் பின்னல் மறைந்திருந்த அவலங்களை இந்நாவலின் கதைமாந்தர்களின் வாழ்வியலை கொண்டு நுணுகி ஆராயமுடிந்தது .

**துணை நின்ற நூல்கள் :**

1.சிவசுப்பிரமணியன். ஆ ( 2014), இனவரைவியலும் தமிழ் நாவலும் , பாவை பிரிண்டர்ஸ் , சென்னை .

2.பக்தவத்சல பாரதி (2009), பண்பாட்டு மானிடவியல் , மெய்யப்பன் பதிப்பகம் , சிதம்பரம் .

3.பரமசிவம். தொ (2014), அறியப்படாத தமிழகம் ,காலச்சுவடு பதிப்பகம் , நாகர்கோவில் .

4.மாணிக்கம். அ (2006), திருக்குறள் தெளிவுரை, மீனாட்சி ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை .

5.மீரான்மைதீன் (2013) ,அஜ்னபி, காலச்சுவடு பதிப்பகம் , நாகர்கோவில் .

6.ராஜகோபாலன் . எம் .ஆர் ( 2007) ,சுற்றுசூழல் சில சிந்தனைகள் , நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.

7. https://www.vallamani/?p=82461.